# மொத்தத் தேசிய உற்பத்தி, வருவாய், செலவினம்

## பொதுவான போக்குகள்

1986 இல் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி உண்மை நியதிகளில் 4.3 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1985 இன் 5 சதவீதவளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் வளர்ச்சி வீதத்தின் வீழ்ச்சிக்கு தேயிலை, நெல் ஆகிய துணைத்துறைகளின் குறைந்தளவிலான உற்பத்தி பெருமளவுக்குக் காரணமாகும். எனினும் தெங்கு, சிறு ஏற்றுமதிப்பயிர்கள், சிறு உணவுப் பயிர்கள் ஆகிய துணைத்துறைகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக்காட்டின. தயாரிப்புத்துறையில் தொழிற்சாலைக் கைத்தொழில்களும் சிறு, ஏனைய கைத்தொழில்களும் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினைப் பதிவுசெய்தன.

1986 இல் மொத்தத் தேசிய உற்பத்தி நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் 10.3 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 15,990 கோடியை அடைந்தது. உண்மை நியதிகளில் மொத்தத் தேசிய உற்பத்தி 1985 இன் 5.3 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த விலை மாற்றத்தினை அளவிடும் உள்ளடக்க மொத்தத் தேசிய உற்பத்தி விலைச்சுருக்கி 1985 இன் 1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1986 இல் 5.5 சதவீதத்தால் உயர்வடைந்தது.

1986 இல் இலங்கையின் நடுவாண்டுக் குடித்தொகை 161 இலட்சமாக தற்காலிகமாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன் இது 1985 இனைவிட 1.8 சதவீதமான வளர்ச்சியையும் கொண்டுள்ளது. இதன்படி நடைமுறை விலைகளில் தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 9,918 (ஐ.அ.டொலர் 354) ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. உண்மை நியதிகளில் தலைக்குரிய வருவாய் முன்னைய ஆண்டின் 3.7 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2.7 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வர்த்தகமாற்று விகிதத்தின் தாக்கத்திற்கு சீராக்கஞ்செய்யப்பட்ட பின்பு மதிப்பிடப்படும் உண்மைத் தேசிய வருவாய் 1986 இல் 3.4 சதவீதத்தால் உயர்வடைந்தது.

1986 இல் பொருளாதார வளர்ச்சியின் முதன்மை மூலங்களாக தயாரிப்பு, வேளாண்மை, வர்த்தகம், பொதுநிருவாகம் என்பன விளங்கின. 1986 இல் முன்னிற்கும் வளர்ச்சித்துணைத்துறையாக தொழிற்சாலைக் கைத்தொழில்கள் விளங்கின.

## துறைரீதியான செயலாற்றம்

1984 – 1986 காலப்பகுதிக்கான பலவகைத் துறைகளிலுமான வளர்ச்சி வீதங்கள் அட்டவணை 1.2 இல் தரப்பட்டுள்ளன. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில்துறை 1986இல் முன்னைய ஆண்டினைவிட 2.6 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. 1986இல் வேளாண்மைத்துறையில் கூட்டப்பட்ட பெறுமதியின் அதிகரிப்பு 2.2 சதவீதமாக விளங்கியவேளை காட்டுத்தொழில், கடற்றொழில் துணைத்துறைகளில் 1.8 சதவீதமாகவும் 8.9 சதவீதமாகவும் விளங்கின. 1985 இன் 9.9சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1986 இல் வேளாண்மைத்துறையின் ஒப்பீட்டுரீதியான குறைந்த செயலாற்றம் கடற்றொழில் துணைத்துறையின் அதிகரித்த செயலாற்றத்தினால் ஓரளவிற்கு ஈடுசெய்யப்பட்டது.

அட்டவணை 1.6

## நிலையான விலைகளில் ( 1982 ) மொத்தத் தேசிய உற்பத்தியின் துறைவாரியான உள்ளடக்கமும் அதிகரிப்பும் 1984 — 1986

| துறை | கூட்டப்பட்ட பெறுமதி (ரூ. ப. இ.) | | | மொத்தத் தேசிய உற்பத்தியில் சதவீதப் பங்கு | | | முன்னைய ஆண்டுக்கு மேலான அதிகரிப்பு (ப. இ. ரூ.) | | மொத்த தேசிய உற்பத்தி அதிகரிப்பின் சதவீதப் பங்கு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1984(அ) | 1985(அ) | 1986 (அ) | 1984 | 1985 | 1986 | 1985 | 1986 | 1985 | 1986 |
| 1. வேளாண்மை, காட்டுத் தொழில், கடற்றொழில் ... | 26,113 | 28,366 | 29,106 | 25.8 | 26.6 | 26.1 | 2,253 | 740 | 42.2 | 15.3 |
| 1.1 வேளாண்மை ... | 22,300 | 24,504 | 25,037 | 22.0 | 23.0 | 22.4 | 2,204 | 533 | 41.3 | 11.0 |
| 1.1.1 தேயிலை ... | 2,681 | 2,759 | 2,723 | 2.6 | 2.6 | 2.4 | 78 | — 36 | 1.5 | — 0.7 |
| 1.1.2 இறப்பர் ... | 878 | 851 | 856 | 0.9 | 0.8 | 0.8 | — 27 | 5 | — 0.5 | 0.1 |
| 1.1.3 தெங்கு ... | 2,513 | 3,828 | 3,935 | 2.5 | 3.6 | 3.5 | 1,315 | 107 | 24.6 | 2.2 |
| 1.1.4 நெல் ... | 6,166 | 6,783 | 6,613 | 6.1 | 6.4 | 5.9 | 617 | — 170 | 11.6 | — 3.5 |
| 1.1.5 ஏனையவை ... | 10,062 | 10,283 | 10,910 | 9.9 | 9.6 | 9.8 | 221 | 627 | 4.1 | 13.0 |
| 1.2 காட்டுத் தொழில் ... | 1,889 | 1,923 | 1,958 | 1.9 | 1.8 | 1.8 | 34 | 35 | 0.6 | 0.7 |
| 1.3 கடற்றொழில் ... | 1,924 | 1,939 | 2,111 | 1.9 | 1.8 | 1.9 | 15 | 172 | 0.3 | 3.6 |
| 2. சுரங்க அகழ்தலும் கல் உடைத்தலும் ... | 2,449 | 2,486 | 2,615 | 2.4 | 2.3 | 2.3 | 37 | 129 | 0.7 | 2.7 |
| 3. தயாரிப்புத் தொழில் ... | 15,390 | 16,193 | 17,558 | 15.2 | 15.1 | 15.7 | 803 | 1,365 | 15.1 | 28.3 |
| 3.1 மாப்பயிர் பதனிடல் ... | 2,983 | 3,222 | 3,225 | 2.9 | 3.0 | 2.9 | 239 | 3 | 4.5 | 0.1 |
| 3.2 தொழிலகக் கைத்தொழில் ... | 10,296 | 10,811 | 12,108 | 10.2 | 10.1 | 10.8 | 515 | 1,297 | 9.7 | 26.9 |
| 3.3 சிறு கைத்தொழிலும் ஏனையவையும் ... | 2,111 | 2,160 | 2,225 | 2.1 | 2.0 | 2.0 | 49 | 65 | 0.9 | 1.3 |
| 4. கட்டடவாக்கம் ... | 8,030 | 8,070 | 8,191 | 7.9 | 7.6 | 7.3 | 40 | 121 | 0.7 | 2.5 |
| 5. மின்வலு, வளி, நீர், நலத்துறைப் பணிகள் ... | 1,239 | 1,313 | 1,406 | 1.2 | 1.2 | 1.3 | 74 | 93 | 1.4 | 1.9 |
| 6. போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொடர்பூட்டல் ... | 12,437 | 12,959 | 13,377 | 12.3 | 12.1 | 12.0 | 522 | 418 | 9.8 | 8.7 |
| 7. மொத்த, சில்லறை வர்த்தகம் ... | 27,029 | 22,925 | 23,821 | 21.7 | 21.5 | 21.4 | 896 | 896 | 16.8 | 18.6 |
| 8. வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்து ... | 4,526 | 4,975 | 5,174 | 4.5 | 4.7 | 4.6 | 449 | 199 | 8.4 | 4.1 |
| 9. குடியிருப்புக்களின் உடைமை ... | 3,381 | 3,432 | 3,497 | 3.3 | 3.2 | 3.1 | 51 | 65 | 1.0 | 1.3 |
| 10. பொது நிருவாகமும் பாதுகாப்பும் ... | 4,165 | 4,432 | 5,274 | 4.1 | 4.2 | 4.7 | 267 | 842 | 5.0 | 17.5 |
| 11. பணிகள் (வேறு எங்கும் குறிப்பிடப்படாதவை) ... | 4,636 | 4,419 | 4,242 | 4.6 | 4.2 | 3.8 | — 217 | — 177 | — 4.1 | — 3.7 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 104,395 | 109,570 | 114,261 | 103.0 | 102.7 | 102.4 | 5,175 | 4,691 | 97.0 | 97.2 |
| 13. வெளிநாட்டிலிருந்து கிடைத்த தேறிய காரணி வருவாய் ... | — 2,996 | — 2,829 | — 2,696 | — 3.0 | — 2.7 | — 2.4 | 159 | 133 | 3.0 | 2.8 |
| 14. மொத்தத் தேசிய உற்பத்தி ... | 101,399 | 106,741 | 111,565 | 100.0 | 100.0 | 100.0 | 5,334 | 4,824 | 100.0 | 100.0 |

(அ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

பெருந்தோட்ட வேளாண்மையில் இறப்பர் உற்பத்தி 0.6 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் தேயிலை உற்பத்தி 1.3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 1985 இல் 52 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்த தெங்கு துணைத்துறை 1986 இல் 2.8 சதவீதத்தால் சிறிதளவு அதிகரித்தது. கடற்றொழில் துணைத்துறையில் கடல்மீன் உற்பத்தி 8.3 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் நன்னீர்மீன் உற்பத்தி 9.8 சதவீதத்தால் உயர்வடைந்தது.

1986இல் தயாரிப்புத்துறை 8.4 சதவீதத்தால் விரிவடைந்தது. ஏற்றுமதி சார் வேளாண்மைப் பதனீட்டுக் கைத்தொழில்கள் வேளாண்மைத்துறையில் வெளியீட்டு வளர்ச்சி குறைவடைந்தமையின் விளைவாகத் தேங்கிய நிலையில் இருந்தன. தொழிற்சாலைக் கைத்தொழில்கள் துணைத்துறையில், அரசுக்குச் சொந்தமான கைத்தொழில்கள் 7.6 சதவீதத்தால் விரிவடைந்தவேளையில் தனியார்துறை கைத்தொழில்களின் வெளியீடு 15 சதவீதத்தால் அதிகரித்தது. சிறு, நடுத்தரக் கைத்தொழில்களும் தொடர்பு ரீதியில் உயர் வளர்ச்சியைப் பதிவுசெய்தன. வெளியீட்டுப் பெறுமதியில் கூடிய அதிகரிப்புக்கள் நகைத் தயாரிப்பிலும் இரத்தினக்கற்கள், வைரங்கள் வெட்டுதலிலும் காணப்பட்டன.

சுரங்கத்தொழில், பார்குழித்தொழில் துறையில் 1986 இல் 5.2 சதவீத வளர்ச்சி பதிவுசெய்யப்பட்டது. இது பெருமளவுக்கு சி.எ.உ. நியதிகளில் 15 சதவீத அதிகரிப்பினைப் பதிவுசெய்த இரத்தினக்கல் ஏற்றுமதி அதிகரிப்பின் விளைவாகும்.

1986 இல் கட்டுமானத்துறை 1.5 சதவீதத்தால் அதிகரித்தது. குறைவான வளர்ச்சி வீதத்திற்கு முதன்மை வேலைகளில் பெரும்பாலானவை ஏற்கனவே முடிக்கப்பட்டுள்ளதால் விரைவுபடுத்தப்பட்ட மகாவலிச் செயற்றிட்டத்தின் கீழான கட்டுமான வேலைகளின் குறைந்த மட்டம் பெருமளவுக்கு காரணமாகும். வங்கித்தொழில்துறையின் நிதி உதவிகளுடன் தனியார் கட்டுமானம் விரிவான அளவில் மேற்கொள்ளப்பட்ட மின்வாயு, நீர், சுகாதாரப்பணிகள் ஆகியவற்றின் கூட்டப்பட்ட பெறுமதி 1986 இல் 7.1 சதவீதத்தால் அதிகரித்தது. 1986 இல் மின் உற்பத்தி 8.3 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் வாயு உற்பத்தி 35 சதவீதத்தால் அதிகரித்தது.

அட்டவணை 1.7

**மூலதனச் செலவின் இறக்குமதி உள்ளடக்கம்**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | விடயம் | | 1984(அ) | 1985(அ) | 1986(அ) |
|---|---|---|---|---|---|
| 1. | மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் | ... | 39,558 | 38,457 | 42,326 |
| 2. | முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா. க. பெறுமதிகளில்) | ... | 11,443 | 9,488 | 9,649 |
| 3. | கப்பல்களும் வான்கலங்களும் தவிர்ந்த முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் (கொ. கா. க. பெறுமதிகளில்) | ... | 10,512 | 7,877 | 9,649 |
| 4. | இறக்குமதி உள்ளடக்கம் (1 இன் சதவீதமாக 2) | ... | 28.9 | 24.7 | 22.8 |

(அ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 1.8

## மொத்த மூலவளங்களும் அவற்றின் பயன்பாடுகளும் 1978—1986

| விடயம் | நடைமுறைச் சந்தை விலைகளில் (ப. இ. ரூ) | | | | 1978 விலைகளில் | | | | | | | | சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1978 | 1984(அ) | 1985(அ) | 1986(அ) | 1978 | | 1984(அ) | | 1985(அ) | | 1986(அ) | | 1984 இற்கு மேலாக 1985 | 1985 இற்கு மேலாக 1986 |
| | | | | | தொகை ப.இ. ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | | |
| 1. மொத்த மூலவளங்கள் ... | 59,537 | 207,163 | 224,021 | 242,917 | 59,537 | 100 | 84,508 | 100 | 85,809 | 100 | 90,712 | 100 | 1.5 | 5.7 |
| 1.1 மொ. உ. உ. சந்தை விலைகளில் ... | 42,665 | 153,746 | 162,375 | 179,510 | 42,665 | 72 | 58,907 | 70 | 61,852 | 72 | 64,512 | 71 | 5.0 | 4.3 |
| 1.2. பொருட்களினதும், காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் ... | 16,872 | 53,417 | 61,646 | 63,407 | 16,872 | 28 | 25,601 | 30 | 23,957 | 28 | 26,200 | 29 | — 6.4 | 9.4 |
| 2. பயன்பாடு ... | 59,537 | 207,163 | 224,021 | 242,917(ஆ) | 59,537 | 100 | 84,508 | 100 | 85,809 | 100 | 90,712 | 100 | 1.5 | 5.7 |
| 2.1. நுகர்வு ... | 36,148 | 123,170 | 143,102 | 157,886 | 36,148 | 61 | 51,959 | 62 | 53,091 | 62 | 54,259 | 59 | 2.2 | 2.2 |
| 2.2. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் .. | 8,521 | 39,558 | 38,457 | 42,326 | 8,521 | 14 | 14,449 | 17 | 13,688 | 16 | 14,987 | 17 | — 5.3 | 9.5 |
| 2.2.1. அரசு ... | (3,077) | (7,075) | (7,767) | (9,634) | (3,077) | (5) | (3,890) | (5) | (3,963) | (5) | (4,426) | (5) | 1.9 | 11.7 |
| 2.2.2. அரச கூட்டுத்தாபனங்கள் | (2,056) | (32,483) | (30,690) | (32,692) | (2,056) | (3) | (10,559) | (12) | (9,725) | (11) | (10,561) | (12) | — 7.9 | 8.6 |
| 2.2.3. தனியார்துறை ... | (3,388) | | | | (3,388) | (6) | | | | | | | | |
| 2.3. இருப்புக்களில் மாற்றம் ... | 33 | 150 | 225 | 137 | 33 | — | 36 | — | 63 | — | 38 | — | — | — |
| 2.4. பொருட்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் ... | 14,835 | 44,285 | 42,237 | 42,568 | 14,835 | 25 | 18,064 | 21 | 18,967 | 22 | 21,428 | 24 | 5.0 | 13.0 |

(அ) தற்காலிகமானவை.
(ஆ) இறுதியானஇறை வெளிப்பாடுகள் கிடைக்கும்போது திருத்தத்திற்குட்படும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், தொலைத்தொடர்புத்துறை 1986 இல் 3.2 சதவீதத்தால் விரிவடைந்தது. மொத்த விற்பனை, சில்லறை வர்த்தகத்தின் கூட்டப்பட்ட பெறுமதி 4 சதவீதத்தால் அதிகரித்தது. வங்கித்தொழில், காப்புறுதி, மெய்ச்சொத்துத்துறை முன்னைய ஆண்டின் 9.9 சதவீத வளர்ச்சிக்கு மாறாக 4 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது.

வதிவிடங்களின் உடைமையில் கூட்டப்பட்டபெறுமதி 1.9 சதவீதத்தால் உயர்வடைந்தது. பொதுநிருவாகம், பாதுகாப்பு ஆகியவற்றின் கூட்டப்பட்ட பெறுமதி 1986 இல் 19 சதவீதத்தால் அதிகரித்தது. சுற்றுலாக் கைத்தொழிலின் வீழ்ச்சியால் தொடர்ந்தும் பாதிப்படைந்த பணிகள்துறை 4.0 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## செலவுப் போக்கு

1986 இல் நடைமுறைவிலைகளில் மொத்த உள்நாட்டுச் செலவு 10.2 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 20,030 கோடியை அடைந்தது. மொத்த நுகர்வுச்செலவு ரூ. 15,790 கோடிக்கு வகைகூறியதுடன் இது முன்னைய ஆண்டினை விட ஏறத்தாழ 10.3 சதவீத அதிகரிப்பாகும். தனியார் நுகர்வுச்செலவு 10.2 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் அரச நுகர்வுச்செலவு 11.3 சதவீதத்தால் அதிகரித்தது.

இருப்புக்களின் மாற்றல்கள் உட்பட மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் முன்னைய ஆண்டின் 2.6 சதவீத வீழ்ச்சிக்கு மாறாக 1986 இல் 9.8 சதவீதத்தால் உயர்வடைந்தது. அரச கூட்டுத்தாபனங்களினதும் தனியார்துறையினதும் ஒன்றுபட்ட மூலதன ஆக்கம் 1986 இல் 6.4 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் முன்னைய ஆண்டில் இது 5.5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. 1986 இல் அரச துறையின் மொத்த மூலதன ஆக்கம் 1985 இன் 11 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 23.0 சதவீதத்தால் அதிகரித்தது.

அட்டவணை 1.9

**தேசிய சேமிப்புகள் 1984—1986**

(நடைமுறைச் சந்தை விலைகளில்)

(ப. இ. ரூபாய்களில்)

| வகை | 1984* | 1985* | 1986* |
|---|---|---|---|
| 1. மொ. தே. உ. சந்தை விலைகளில் | 153,746 | 162,375 | 179,510 |
| 2. உள்நாட்டுச் சேமிப்புகள் ... | 30,576 | 19,273 | 21,624 |
| 3. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் ... | —3,401 | —3,400 | —3,861 |
| 4. வெளிநாட்டிலிருந்தான தேறிய தனியார் மாற்றல்கள் ... | 7,031 | 7,273 | 8,251 |
| 5. தேசிய சேமிப்புகள் ... | 34,206 | 23,146 | 26,014 |
| 6. உள்நாட்டு சேமிப்பு விகிதாசாரம் (1இன் சதவீதமாக 2) ... | 19.9 | 11.9 | 12.0 |
| 7. தேசிய சேமிப்பு விகிதாசாரம் (1இன் சதவீதமாக 5) ... | 22.2 | 14.3 | 14.5 |

* தற்காலிகமானவை. மூலம்: இலங்கை மத்திய வங்கி.

*1985* இல் *2.8* சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்த மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் *1986* இல் *10.1* சதவீதத்தால் உயர்வடைந்தது. *1986* இல் இறக்குமதி செய்யப்பட்ட முதலீட்டு பொருட்களின் மொத்தப் பெறுமதி *1985* இன் *17.1* சதவீத வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் *1.7* சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கத்தின் இறக்கு மதிக்கூறு *1986* இல் *22.8* சதவீதமாக விளங்கியது.

மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கத்தில் *77.4* சதவீதம் தனியார் துறையிலும் அரச கூட்டுத்தாபனங்களிலும் காணப்பட்டன. மூலதன ஆக்கத்தின் அதிகூடிய கூறு கட்டட மற்றும் ஏனைய கட்டுமானத்தில் காணப்பட்டது.

*1986* இல் பொறி, பொறித்தொகுதி ஏனைய மூலதனப் பொருட்கள் ஆகியவற்றில் மூலதன ஆக்கம் அதிகரித்தவேளையில் போக்குவரத்துக்கருவிகளில் அது வீழ்ச்சியடைந்தது. காணி அபிவிருத்தி, மீளப்பயிரிடல் ஆகியவையும் *73.2* சதவீதத்தால் விரிவடைந்தன.

**மூலவளங்களின் கிடைத்தலும் பயன்பாடும்**

*1986* இல் இலங்கைப் பொருளாதாரத்திற்குக் கிடைக்கக்கூடியதாக விருந்த மொத்த மூலவளங்களில் ரூ. *17,950* கோடி *(74* சதவீதம்*)* உள்நாட்டு வளங்களிலிருந்து கிடைத்தவேளையில் ரூ. *6,340* கோடி *(26* சதவீதம்*)* இறக்கு மதிகளிலிருந்து கிடைத்தது.

மொத்த மூலவளங்களில் நுகர்வின்மீது செலவிடப்பட்ட பங்கு *65* சத வீதமாகும். மூலதன ஆக்கத்தின்மீது *17.5* சதவீதம் செலவிடப்பட்டவேளையில் பண்டங்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் ஏற்றுமதிகள் மீது *17.5* சத வீதம் செலவிடப்பட்டது. *1985*இன் ஒப்பிடத்தக்க எண்தொகைகள் நுகர்வின்மீது *64* சதவீதமும், மூலதன ஆக்கத்தின்மீது *17.2* சதவீதமும் பண்டங்கள், காரணி யல்லாப் பணிகளின் ஏற்றுமதி மீது *18.9* சதவீதமும் ஆக விளங்கின.

*1978* இன் விலைகளில் பெறுமதியிடப்பட்ட மொத்த மூலவளங்கள் *1985* இன் *1.5* சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் *1986* இல் *5.7* சதவீதத் தால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டது. முன்னைய ஆண்டில் *6.4* சத வீதத்தால் வீழ்ச்சியடைந்த பண்டங்களினதும் காரணியல்லாப் பணிகளினதும் இறக்குமதிகள் *1986* இல் *9.4* சதவீதத்தால் உயர்வடைந்தன. *1985* இன் *2.2* சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் மொத்த நுகர்வு *1986* இல் *2.2* சதவீதத்தால் அதிகரித்தது. *1985* இல் *5.3* சதவீதத்தால் வீழ்ச்சியுற்ற மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கம் *9.5* சதவீதத்தால் உயர்வடைந்தது. தனியார்துறையிலும் அரச கூட்டுத்தாபனத்திலும் மூலதன ஆக்கம் *1985* இன் *7.9* சதவீத வீழ்ச்சிக்கு மாறாக *1986* இல் *8.6* சதவீதத்தால் உயர்வடைந்தது.

*1986* இல் உள்நாட்டுச் சேமிப்புக்கள் ரூ. *2,160* கோடியாக விளங்கி *1985* இனை விட ரூ. *230* கோடி அதிகரிப்பினைக்காட்டியது. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்நாட்டுச் சேமிப்புக்களின் விகிதாசாரம் *1986* இல் *12.0* சதவீதமாக விளங்கியது. இது*1985* இல் *11.9* சதவீதமாகும். தேறிய வெளிநாட்டு காரணி வருவாய், தனியார் மாற்றல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மொத்தத் தேசிய சேமிப்புக்கள் *1986* இல் *12.4* சதவீதத்தால் அதிகரித்து மதிப்பிடப்பட்ட பெறுமதியான ரூ. *2,600* கோடியினை எட்டியது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தேறிய சேமிப்புக்களின் விகிதம் *1985* இன் *14.3* சதவீதத்திலிருந்து *1986* இல் *14.5* சதவீதமாக உயர்வடைந்தது.